**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 188/2018 | Date | : 18.08.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 2 | Taluk | : |
| Name | : வசந்தா | Calling | : |
| Husband Name | : பழனிச்சாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.08.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் CRPC பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு மாவட்டம் நசியனூர் சாமிகவுண்டன் பாளையம் மெயின் வீதியில் குடியிருந்து தோட்டத்து வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நானும் எனது கணவரும் வீட்டை பூட்டிவிட்டு வேலைக்கு சென்று விட்டு மீண்டும் மதியம் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே சென்று பார்த்தபோது பீரோவும் உடைக்கப்பட்டு இருந்தது. பீரோவில் வைத்திருந்த 03 பவுன் எடையுள்ள தங்கச் செயினும், 02 பவுன் எடையுள்ள தங்கச் செயினும் காணாமல் போயிருந்தது. அக்கம் பக்கம் விசாரித்ததில் யாருக்கும் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

2. பின்னர் எனது மகன் வெங்கடேஸ்வரனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன் எனது மகன் புகார் கொடுத்தார். பின்னர் நான்கு அல்லது ஐந்து மாதம்

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.18 17:01:33 +0530

கழித்து எங்கள் நகைகள் கிடைத்துவிட்டது. பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகைகளை பெற்றுக் கொண்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் (அ.த.சா.ஆ.2) உள்ள தங்கச் செயின்கள் என்னுடையதுதானா என்று ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் சொல்வது அனைத்தும் பொய் என்றும் என்னுடைய வீடு உடைக்கப்படவில்லை என்றும், பீரோ உடைக்கப்படவில்லை என்றும், தங்க செயின்கள் எதுவும் காணாமல் போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சி லட்சுமணனை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 10 அல்லது 15 ஆண்டுகளாக தெரியும்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.18 17:01:42 +0530

Judicial Magistrate No.III,

Erode.

# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 188/2018 | Date | : | 18.08.2026 |
| Deposition of Witness for | : | அ.சா. 3 | Taluk | : | |
| Name | : | லட்சுமணன் | Calling | : | |
| Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.08.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் CRPC பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் தற்பொழுது சாமிகவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் அ.சா.1 வெங்கடேஸ்வரன் மற்றும் அவரது அம்மா அ.சா.2 வசந்தா ஆகியோர்களை எனக்கு தெரியும். வழக்கு குறித்து எந்த விவரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் மணி என்கிற மணிகண்டன் என்பவரின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள சாட்சி கையொப்பங்களிலும், கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள சாட்சி கையொப்பங்களிலும் என்னுடைய கையெழுத்து இல்லை. இவ்வழக்கு குறித்து எந்த விவரமும் எனக்குத் தெரியாது. இது பற்றி போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.18 17:01:49 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

கடந்த 01.07.2018 ஆம் தேதி நானும் எனது நண்பர் தனசேகரனும் காலை 07.00 மணி அளவில் ஈரோட்டில் இருந்து சக்தி செல்லும் ரோட்டில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது கொங்கம்பாளையம் பிரிவு அருகே சித்தோடு போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டு இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது நான் எங்கும் செல்லவில்லை அப்போது எங்களை நிறுத்தி சோதனை செய்து கொண்டிருந்தபோது, கொங்கம்பாளையத்திலிருந்து சக்தி போகும் ரோட்டில் TN 37 BZ 6030 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற TVS APPACHE மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று நபர்கள் போலீசாரை கண்டதும் திரும்பி போக முற்பட்டவர்களை போலீசார் மடக்கி பிடித்து விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வாகனத்தில் வந்த நபர்களை பிடித்து விசாரிக்க வேண்டி இருப்பதால் எங்களை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்களா என்றால் இல்லை. அவர்கள் மூன்று பேரும் தனது பெயர்களை மணி, ஸ்ரீதர், சக்திவேல் என்று கூறி குற்றத்தை எங்கள் முன்னிலையில் ஒப்புக் கொண்டார்களா என்றால் தெரியாது. எதிரிகள் மூன்று பேரையும் என் முன்னிலையில் கைது செய்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. அப்போது எதிரி மணி என்கிற மணிகண்டன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. அதில் நானும் தனசேகரன் என்பவரும் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. பின்பு எதிரி மணி என்கிற மணிகண்டன் அவர்கள் வந்த அப்பாச்சி மோட்டார் சைக்கிளை போலீசாரிடம் ஆஜர் செய்ததை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய போது அதில் நானும் தனசேகரனும் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தோமா என்றால் என்னிடம் யாரும் கையெழுத்து வாங்கவில்லை. எதிரி மணி என்கிற மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகளையும் எங்களையும் அழைத்துக் கொண்டு ஈரோடு சூலை பாரதி நகர் சென்று அங்குள்ள ஒரு வீட்டை மணிகண்டன் தன் வீடு என்று அடையாளம் காட்டி வீட்டிற்குள் சென்று அங்கிருந்து எடுத்து வந்து இரண்டு தங்க செயின்களை போலீசாரிடம் ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் சாட்சி கையொப்பம்

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.18 17:01:59 +0530

பெற்றார்களா என்றால் நான் எங்கும் செல்லவில்லை யாரிடமும் கையொப்பம் செய்யவில்லை. வழக்கு குறித்த விவரத்தை தெரிந்து கொண்டும் எதிரிகளை கைது செய்த போதும் ஒப்புதல் வாக்குமூலம் பெரும்போதும் அவர்கள் ஆஜர் செய்த பொருட்களை கைப்பற்றிய போதும் உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது என்னுடைய கையெழுத்து இல்லை என்று எதிரிக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.08.18 17:02:04 +0530

Judicial Magistrate No.III,

Erode.